# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2084/59 - 2018 අගෝස්තු මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.16

*2084/59 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**ஓய்வூதியப் பிரமாணக் கோவை**

*1948 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, ஓய்வூதியப் பிரமாணக் கோவை (திருத்தம்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1934, பெப்புருவரி 05 ஆந் திகதிய ஓய்வூதியப் பிரமாணக் கோவையின் 51 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**அறிவித்தல்**

*காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்ட 1934.02.05 ஆந் திகதிய ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 02 ஆம் பிரிவிற்குப் பின்னர் இல. 1750/1 மற்றும் 2012, மாச்சு 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் மூலம் இல. 01 துணைப் பிரிவு உள்ளடக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தை நீக்கிவிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய துணைப் பிரிவை உள்ளடக்குவதன் மூலம் அப் பிரமாணக் கோவை மேலும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள 02 ஆம் 03 ஆம் பிரிவுகளின் கீழான ஏற்பாடுகளில் எதுவித மாற்றங்களும் இடம்பெறவில்லை.*

*1. (அ) 2012, மாச்சு 19 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் ஓய்வூதிய அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் அல்லது சேவையின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ஓய்வூதியம் திருத்தப்படும் போது அவர்களுக்கு முன்னர் செலுத்தப்பட்ட முழுமையான பணிக்கொடை அவர்களின் புதிய வழங்கல்களில் இருந்து அறவிடப்படுதல் வேண்டும்.*

*(ஆ) 2012, மாச்சு 19 ஆந் திகதிக்கு முன்னர் மீளவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் ஓய்வூதியத்தை திருத்தும் போது முன்னர் அவர்களுக்கு செலுத்தப்பட்ட வழங்கல்களுக்கு அமைய, செலுத்தப்பட்ட பணிக்கொடையில் இருந்து குறித்த திகதி வரை அறவிடப்பட்ட பணிக்கொடையின் பெறுமதி தவிர, எஞ்சிய பணிக்கொடையின் பெறுமதியானது திருத்தத்தின் பின்னர் உரித்துப் பெறும் பணிக்கொடையிலிருந்து கழிக்கப்பட்டு, தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு மீண்டும் செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின் வழங்குதல் வேண்டும்.*

ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,
அரசாங்க நிருவாக முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சர்.

அரசாங்க நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2018, ஓகத்து 14.

*8-1150*


1A-G28314 - 08 (2018/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.